ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பரமகாருணிகரான

பெரியவாச்சான்பிள்ளை

முதலான பூர்வாசார்யர்கள்

அருளிச்செய்த

ரஹஸ்யங்கள்.

முதலாவது

கலியனருள்பாடு.

ஸ்ரீமாந் - உ - வே

அரசாணிபாலை-கந்தாடை

கிருஷ்ணமாசார்யர்ஸ்வாமியால்

பரிசோதிக்கப்பட்டு,

செஞ்சி - இல்வீடு

அரங்கசாமிமுதலியார்

அண்ட் கம்பினியாரால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1889.

Registered Copy-right.

விளம்ப்ரம்.

இந்த க்ரந்தமும, மற்றும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய தங்களும் வேண்டுமவர்கள்;

திருவல்லிக்கேணி-பேயாழ்வார்ஸந்நிதிவீதி-க0-வது கதவிலக்கமுள்ள மாளிகையில், (போஸ்ட் மாஸ்டர்ஜெனரல்ஸ் ஆபீஸ்-க்ளார்க்) அரசாணிபாலை-கந்தாடை-கிருஷ்ணமாசாரியரிடத்திலும்;

திருவல்லிக்கேணி-வீரராகவமுதலிவீதி-52-வது கதவிலக்கமுள்ள மாளிகையில், (மக்டோவல் அண்ட் கம்பினி) செஞ்சி-இல்வீடு-அரங்கசாமிமுதலியாரிடத்திலும்;

சென்னையில்-சவரன்விற்கும் சராப்புக்கடைக்கு மேலண்டை செ-இ-அரங்கசாமிமுதலியார் அண்ட் கம்பினியாருடைய புஸ்தகஷாப்பிலும் வாங்கிக்கொள்ளலாம்.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

கலியனருள்பாடு.

ஸ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸ்ரீ வைகுண்ட நிகேதநனாய் ஸமஸ்தகல்யாணகுண பரிபூர்ணனாயிருக்கிற ஸர்வேஶ்வரன்; ஸகலாத்மாக்களோடு தனக்குண்டான ஸம்பந்தமொத்திருக்க, சிலர் தன்னை யநுபவித்து வாழ்ந்தும் சிலர் இழந்துகொண்டு அசித்கல்பராய்ப் போரவுங் கண்டு திருவுள்ளங்கலங்கி, "இவர்கள் நம்மைக்கிட்டி யநுபவிக்கும் விரகேதோ?" என்று பார்த்து, ஸமகாலீநர்க்கு ஆஶ்ரயணோபயோகியான விபவங்கள்போலன்றிக்கே (பின்னானார்வணங்குஞ்சோதி) என்கிறபடியே எல்லாக்காலத்திலும் எல்லாத்தேசங்களிலும் எல்லார்க்கும் ஆஶ்ரயணம் ஸுலபமாம்படி பண்ணி, அர்ச்சாவதாரமாய் கோயில் முதலான திருப்பதிகள்தோறும் க்ருஹங்கள்தோறும் நித்யஸந்நிதிபண்ணி, ஆஶ்ரிதபராதீநனாயும், பராங்குஶ பட்டநாதாதி பக்தமுக்தராலும் அநேகாத்மாக்கள் உஜ்ஜீவிக்கும்படி ரக்ஷித்தருளாநிற்கிறகாலத்திலே;

திருமங்கையாழ்வாரும், (வென்றியேவேண்டி வீழ் பொருட்கிரங்கி வேற்கணார்கலவியேகருதி) என்று ஸர்வேஶ்வரன் விபூதியடைய இவர் தொடைக்கீழே கிடக்கிறதோ! என்று ஶங்கிக்கவேண்டும்படி அதிஶயிதாஹங்கார யுக்தராய், அதுக்கடியான தேஹாத்மாபிமாநத்தையுடையராய், ஆத்மவிஷயமாதல் ஈஶ்வரவிஷயமாதல் ஒரு ஜ்ஞாநம் பிறக்கைக்கு யோக்யதை யில்லாதபடி விஷயப்ரவணராயிருக்க; இவரை யிதினின்று மெடுக்க விரகுபார்த்து, இவருக்கு விஷயங்களிலுண்டான ரஸிகத்வமே பற்றாசாகத் தன்னழகையும், ஸர்வார்த்த ப்ரகாஶகமான திருமந்த்ரத்தையும், ஸௌஶீல்யாதி குணதிக்யத்தையும், திருமந்த்ரார்த்தத்துக்கு எல்லைநிலமான திருப்பதிகளையும் காட்டிக்கொடுக்கக் கண்டவிவரும் ஹ்ருஷ்டராய், இவர் (வாடினேன்வாடி) என்று தொடங்கி உகந்தருளின நிலங்கள்தானே ஆஶ்ரயணீயமென்று நினைத்து, (ఆద్యంస్వయంవ్యక్తమిదంవిమానంరఙ్గసంజ్ఞకం-ஆத்யம்ஸ்வயம்வ்யக்தமிதம்விமாநம் ரங்கஸம்ஜ்ஞிகம்) என்கிறபடியே-பகவதர்ச்சாவதார ஸ்த்தலங்களுக்கெல்லாம் ப்ரதாநமாய், (அற்றபத்தர்சுற்றிவாழுமந்தணீரரங்கம்) என்று சொல்லுகிறபடியே - பாகவதகோஷ்டிக்கெல்லாம் விரும்பிவர்த்திக்கும் ஸ்த்தலமான திருவரங்கந் திருப்பதியிலே நித்யவாஸஞ் செய்தருளிக்கொண்டு, நாள்தோறும், (கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழில்-நீலமேனிஐயோ! நிறைகொண்டதென்னெஞ்சினையே) என்கிறபடியே- பெரிய பெருமாள் திவ்யமங்களவிக்ரஹத்திலே திருவுள்ளங் குடிபுகுந்து அத்தலைக்கு மங்களாஶாஸநபரராய், திருக்கோபுரம் திருமதிள் திருமண்டபங்கள் திருமடைப்பள்ளி முதலான கைங்கர்யங்களும் நடப்பித்துக்கொண்டு,

(இருந்தமிழ்நூற்புலவன்மங்கையாளன்)என்கிறபடியே-
ஒருவராலும் கரைகாணவொண்ணாதபடியிருக்கிற த்ரமி
டஶாஸ்த்ரத்தைக்கரைகண்ட ஜ்ஞாநாதிக்யத்தையுடை
யராய், தமிழ்க்கவிகளுக் கெல்லாம் தலைவராய், நாலு
கவிப்பெருமாள் என்று திருநாமம்பெற்று;

நம்மாழ்வார், பகவத்விஷய ப்ராவண்யாதிஶயத்தா
லே யருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளான திருவிருத்தம்,
திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி
என்கிற நாலு ப்ரபந்தங்களிலும் ஶப்தரஸம் அர்த்தரஸம்
பாவரஸம்என்கிற ரஸவிஶேஷங்களை எப்போதும் அநு
பவித்துக்கொண்டு,விஶேஷமாக ஆழ்வார் திருவாய்மொ
ழியைத் தலைக்கட்டினவளவிலே * அந்தமில்பேரின்பம
பெற்றவராகையாலே, அத்தை மிகவும் உகப்புடனே
நித்யமாக அநுஸந்தித்துக்கொண்டு போராநிற்கிற நல்ல
டிக்காலத்திலே ;

திருக்கார்த்திகை திவ்யமஹோத்ஸவத்திலே பெ
ருமாளும நாய்ச்சிமார்களும் திருமஞ்சனங் கொண்டரு
ளி * செங்கமலக் கழலிற்படியே நன்றாக வொப்பித்து
நிற்க ; அபபோது ஆழ்வாரும் திருநெடுந்தாண்டகம் என்
கிற ப்ரபந்தத்தையிட்டருளி, ப்ரதமம் பெரியபெரு
மாள் திருச்செவி சாற்றியருளும்படி தேவகானத்திலே
யிட் டநுஸந்தித்து, திருவுள்ள முகக்கும்படி நன்றா
கத் திருவாய்மொழி முகத்தாலு மேத்திநிற்க; பெரிய
பெருமாளும், ஆழ்வார் திறத்தில் திருவுள்ளங் குடிபுகு
ந்து, "ஆழ்வீர் ! நீர் இப்போதொருவார்த்தை சொல்லு
வாரைப்போலே யிராநின்றீர், நாம் உமக்குச் செய்யவே
ண்டுவது உண்டாகில் சொல்லும்" என்ன; ஆழ்வாரும்,
"நித்ய ஸம்ஸாரியாய்ப்போந்த வடியேனை தேவரீர் இப

டி விஷயீகரித்தபின்பு ஒருகுறையுண்டோ? ஆகிலுமொருவிண்ணப்பமுண்டு" என்ன; பெருமாளும், "அத்தைச்சொல்லும்" என்ன ; ஆழ்வாரும், "நாயன்தே ! நாயன்தே! தேவரீர் லோகாநுக்ரஹார்த்தமாகச் செய்தருளின அர்ச்சாவதாரஸ்த்தலங்களில் ப்ரதாநமான இந்த ஸ்த்தலத்திலே மார்கழிமாஸம் ஶுக்லபக்ஷத்தில் ஏகாதசியின்று அத்யயநோத்ஸவம் கொண்டருளும்போது ஶடகோபன் சொல்லான திருவாய்மொழியையும் வேதபாராயணத்தோடு கேட்டருளி, இதுக்கு வேதஸாம்யமும் அநுக்ரஹித் தருளவேணும்" என்ன; பெரியபெருமாளும் திருவுள்ளமுகந்து, "அப்படியே வேதஸாம்யமநுக்ரஹித்தோம், அத்யயநோத்ஸவத்திலே வேதபாராயணத்தோடு திருவாய்மொழியையும் பாராயணம் பண்ணுங்கோள்" என்று அருளப்பாடு ப்ரஸாதித்தருளி; "கலியன் நம்மை தேவகாநத்திலே மிகவும் பாடுகையாலே அவர் மிடறு நொந்தது, ஆனபின்பு, நாமின்று தரித்த ஶிஷ்டமான எண்ணெய்க்காப்பை அவர் திருமிடற்றிலே தடவுங்கோள்" என்று அருளப்பாடு ப்ரஸாதிக்க; பின்பு, பெருமாள்பரிகரமும் அவர் திருமிடற்றிலே எண்ணெய்க்காப்பைச் சாத்த; அவரும் க்ருதார்த்தராய் மடமேற வெழுந்தருளினபின்பு, திருநகரியிலும் ஆழ்வார் அத்யயநோத்ஸவத்துக்குக் கோயிலேற எழுந்தருளும்படிக்குப் பெரியபெருமாள் திருமுகப்பட்டையமும் எழுதி ஸந்நிதிப்பேரையும் திருநகரிக்கு அனுப்பிவைக்க ; ஆழ்வாரும், திருமுகப்பட்டையத்தை ஶிரஸாவஹித்து அத்யயநோத்ஸவத்துக்கு உதவும்படி கோயிலேறவெழுந்தருளினபின்பு, திருமங்கைமன்னனும் ஆழ்வாரையெதிர்கொண்டு திருவடித்தொழுது, ஸந்நிதியிலே எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போக; பெருமாளும் ஆழ்வாரைக்

குளிரக்கடாக்ஷித்தருளி, தம்திருவுள்ளத்தி லுகப்பாலே "நம்மாழ்வார்" என்று திருநாமஞ்சாற்றி, திருமாலைஸ்ரீசடகோபன் திருப்பரிவட்டம் முதலான வரிசைகளை ப்ரஸாதிக்க; திருமங்கைமன்னனும், மற்றைநாள் ஏகாதசி தொடங்கிப் பத்துநாளாக, ப்ராதஃகாலத்திலே வேதபாராயணமும், ராத்ரிகாலத்திலே திருவாய்மொழி அநுஸந்தாநமுமாகக் காலவிபாகம்பண்ணி, வேதங்களை அநுஸந்தித்துச் சாற்றி, திருவாய்மொழி அநுஸந்தித்துச் சாற்றும்போது, ஆழ்வார் முன்பு திருவாய்மொழியைத் தலைக்கட்டினவளவிலே எம்பெருமான் திருவடிகளைச் சேர்ந்தபடியை அநுகரித்து, ஆழ்வாரைப் பெருமாள்திருவடிகளிலே சேரும்படி பண்ணுவித்து, ஆழ்வார் ப்ரதிஸம்வத்ஸரம் அத்யயநோத்ஸவத்துக்கு எழுந்தருளி திருவாய்மொழி அநுஸந்தாநம் நடக்கும்படி பண்ணுவித்து, திருமாலை ஸ்ரீசடகோபன் முதலான வரிசைகளெல்லாம் பெரியபெருமாள் ப்ரஸாதித்து அருளப்பாடும் ப்ரஸாதித்தருளும்படிபண்ணிக்கட்டளையு மிடுவிக்க; பின்பு, ஆழ்வாரும் க்ருதார்த்தராய், திருநகரியேறவெழுந்தருளி, ப்ரதிஸம்வத்ஸரம் கோயிலுக்கு எழுந்தருளி, அத்யயநோத்ஸவத்தைப் பரிபாலநம்பண்ணிக்கொண்டுவர;

இப்படி சிலகாலம் சென்றபின்பு, கலிதோஷத்தாலே ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளான திவ்ய ப்ரபந்தங்கள் லுப்தமாய், பஹுகாலம் அத்யயநாத்யாபநங்களின்றிக்கே, ஆழ்வாரும் அத்யய நோத்ஸவத்துக்குக் கோயிலேற வெழுந்தருளாமலிருக்க; இப்படி சிலகாலம் சென்றவாறே, ஸ்ரீமந்நாதமுநிகள்; ஸ்ரீவேதவ்யாஸபகவான் லோகத்திலே (க) திரோஹிதங்க

(க) திரோஹிதங்களான-மறைந்துகிடந்த.

ளான வேதங்களை உத்தரித்தாப்போலே, ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களை உத்தரிப்பதாகத் திருவுள்ளமாய், திருநகரியேற வெழுந்தருளி, மதுரகவி ஸம்ப்ரதாயஸ்த்தரான ஸ்ரீபராங்குசநம்பி ஸந்நிதியிலே "கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்கிற ஆழ்வார்விஷயமான திவ்ய ப்ரபந்தத்தை லபித்து, பெரியபெருமாள் திருமங்கைமன்னனுக்காகத் திருவாய்மொழிக்குப் பண்ணின அநுக்ரஹாதிஶயத்தைக் கேட்டருளி மிகவும் திருவுள்ளமுகந்து, யோகதசையிலே ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து, தந்முகமாக, ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களையும் லபித்து, க்ருதார்த்தராய், ஸ்வஶிஷ்ய ப்ரஶிஷ்ய முகத்தாலே அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அத்யயநாத்யாபநங்களைப் பண்ணிவைத்து, முன்புபோலே அத்யயநோத்ஸவத்திலே ஆழ்வார் கோயிலேறவெழுந்தருளும்படிக்கும் வேதபாராயணத்தோடேகூட திருவாய்மொழி அநுஸந்தாநம் நடக்கும்படி பண்ணி; பெரியபெருமாள் திருவாய்மொழிக்கு வேதஸாம்யத்தை அநுக்ரஹிக்கையாலே, வேதங்களுக்கு உபக்ரமோத்ஸர்ஜந காலநியமமுண்டானாப்போலே, (ஸ்ருதீநாம் ப்ரஹ்மஸம்ஹிதாநாம் த்ராமிடம் ப்ராம்ஹஸம்ஹிதாம்) என்று ஓதப்பட்ட த்ராவிடவேதமான திருவாய்மொழிக்கும் திருக்கார்த்திகை திவ்யமஹோத்ஸவத்திலே உத்ஸர்ஜந காலமென்றும், மார்கழி மாஸத்தில் அத்யயநோத்ஸவத்திலே உபக்ரம காலமென்றும், த்ராவிட வேதமான திருவாய்மொழியைத் திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே உத்ஸர்ஜநம் பண்ணி, உபக்ரம காலமான அத்யயநோத்ஸவத்திலே பெரியபெருமாள் கேட்டருளுமளவும் ஸ்ரீவைஷ்ணவர்கள் * நெஞ்சினால் நினைந்து வாயினால் மொழியாமலிருக்

கும்படிக்கும், பெரியபெருமாள் ஆழ்வாருக்கு ப்ரதி வ ருஷம் திருமுகப்பட்டையம் ப்ரஸாதிக்கும்படிக்கும், அன்று திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே பெரியபெருமாள் தாம் சாத்திக்கொண்ட எண்ணெய்க் காப்புஶேஷத்தைத் திருமங்கைமன்னன் திருமிடற்றிலே சாத்துவித்து அவர் தம்மைப்பாடின இளைப்பெல்லாம் தீ ரும்படிபண்ணின கட்டளையை,ப்ரதிஸம்வத்ஸரம் திரு க்கார்த்திகைதிவ்யமஹோத்ஸவத்திலே பெரியபெருமா ள் சாத்திக்களைந்த எண்ணெய்ஶேஷத்தை ஆழ்வார்களுக் கெல்லாம் தலைவரான நம்மாழ்வார் திருமிடற்றிலே சாத்தி, அந்தஶேஷத்தை ஸ்ரீ வைஷ்ணவர்கள் தங்கள் தங்கள் திருமிடற்றிலே சாத்தும்படிக்கும், ரிகாதிபே தேந சதுர்விதமான வேதங்களுக்கு ஶிக்ஷாதிகளும் இதிஹாஸபுராணங்களும் அங்கோபாங்கங்களாயிருக்கு மாப்போலே, ஆழ்வாரருளிச்செய்த நாலு ப்ரபந்தங்க ளும் நாலுவேதஸ்த்தாநேயாகவும், திருமங்கைமன்னன் அருளிச்செய்த ஆறு ப்ரபந்தங்களும் மற்றையாழ்வார் களும் ஆண்டாளும் அருளிச்செய்த ப்ரபந்தங்களும் அங்கோபாங்கங்களாகவும்; திருவாய்மொழிதானும் த்வ யார்த்தவிவரணமென்றும்; திருப்பல்லாண்டுமுதல் பெ ரியாழ்வார்திருமொழி, திருப்பாவை, நாய்ச்சியார்திரு மொழி, பெருமாள்திருமொழி,திருச்சந்தவிருத்தம்,திரு மாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், ஆக இப்ப்ரபந்தங்கள் ப்ராயேண ப்ரணவார்த்த ப்ரகாஶகமா கையாலே முதலாயிரமென்றும்; கண்ணிநுண்சிறுத்தா ம்பு, நமஶ்ஶப்தார்த்த விவரணமென்றும்; திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், முதலா ழ்வாரருளிச்செய்த திருவந்தாதிமூன்றும், நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிரு

வந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல், மந்த்ரசேஷவிவரணமென்றும் ; இதில், திருவந்தாதிமூன்றுமுதலாக, பெரியதிருமடலீறாக, ஸப்தரஸ ப்ரதாநமாயிருக்கையாலே,இயல்பாஎன்றும், இப்படிஇருபத்து மூன்று ப்ரபந்தங்களும் திருமந்த்ரார்த்த விவரணமென்றும்; இப்ப்ரபந்தங்களிலே ஆழ்வார்களநுபவத்துக்கு விஷயமாய் எம்பெருமான் விரும்பி வர்த்திக்கிற க்ஷேத்தலங்கள் பரமபதம்,திருப்பாற்கடல் தொடக்கமாக நூற்றெட்டென்றும்; திருவாய்மொழி யொழிந்த ப்ரபந்தங்கள், திருப்பல்லாண்டுமுதலாக திருநெடுந்தாண்டகமளவாக, அத்யயநோத்ஸவத்துக்குமுன்பு பத்துநாளாக பெரியபெருமாள் கேட்டருளும்படிக்கும் ; திருவந்தாதிமுதலாக பெரியதிருமடலீறாக, அத்யயநோத்ஸவாநந்தரம் மற்றைநாள்கேட்டருளும்படிக்கும்; ஆழ்வார்கள் பதின்மர்,ஆண்டாள், ஸ்ரீமந் மதுரகவிகள் ஆக பன்னிரண்டு திருநாமங்களும் அருளிச்செய்த இருபத்துமூன்று ப்ரபந்தங்களில் பாட்டு நாலாயிரமென்றும்; ப்ராம்ஹணனுக்கு, வேதவேதாந்தங்கள் இதிஹாஸ புராணங்கள் அதிகரிக்கவேண்டுமாப்போலே, ப்ரபந்நரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு திவ்யப்ரபந்தங்கள் அதிகரிக்கவேணுமென்றும் ; இதில், திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி எம்பெருமானைத் திருப்பள்ளி யுணர்த்துவதாகையாலே ப்ராதஃகாலத்திலே நித்யம் அநுஸந்தேயமென்றும்; எப்போதும் ப்ரபந்தாநுஸந்தாநத்துக்கு முன்பு மங்களாஸாஸந பரமான திருப்பல்லாண்டு அநுஸந்தேயமென்றும் ; திருவாய்மொழி அநுஸந்தாநத்துக்கு பூர்வோத்தரங்களிலே, ஆழ்வார் விஷயமான கண்ணிநுண்சிறுத்தாம்பு அநுஸந்தேயமென்றும்; இப்படி ஸ்ரீவைஷ்ணவதர்ஸநத்திலே அநேக ஸ்ரீவைஷ்ணவ தர்மங்களை நியமித்த நியமநம்.

உய்யக்கொண்டார், மணக்கால்நம்பி,(க)பெரியமுதலியார்,பெரியநம்பி காலங்களிலும் செல்லாநிற்க; பின்பு, எம்பெருமானார் காலத்திலும் நடந்து செல்லாநிற்க; ஒருஅத்யயநோத்ஸவத்துக்குஆழ்வார் சில அநுபபத்திகளுண்டாகையாலே கோயிலேற வெழுந்தருளாமையாலே எம்பெருமானார்தாமே கோயிலிலே ஒரு நம்மாழ்வாரை திருப்ரதிஷ்ட்டைகொண்டருளப்பண்ணி அத்யயநோத்ஸவத்தை நடப்பித்து, திருமங்கைமன்னனொழிந்த மற்றையாழ்வார்களையுந்திருப்ரதிஷ்ட்டைகொண்டருளப்பண்ணுவித்து, திவ்யதேசங்களிலும் ஆழ்வாரும் ஆண்டாளும் திருப்ரதிஷ்ட்டைகொண்டருளும்படிக்கும் நியமித்து, ஆழ்வார்கள்,(சென்று வணங்குமினோ சேணுயர்வேங்கடத்தை) (திருவேங்கடம் மொய்த்தசோலை மொய்பூந்தடம் தாழ்வரே) (எய்த்திளைப்பதன் முன்னமடைமினோ) என்றும்,(திருவேங்கடமாமலையொன்றுமே தொழ நம்வினையோயுமே) (திருவேங்கடம் நங்கட்குச் சமன்கொள் வீடுதரும் தடங்குன்றமே) என்றும், (வெற்பென்று வேங்கடம்பாடும்) என்றும், (தண்ணருவிவேங்கடம்) என்றும்,(வானோர்க்கும் மண்ணோர்க்கும் வெற்பு) என்றும், (வேங்கடமேவிண்ணோர்தொழுவதும்) (வேங்கடத்துச்சி) என்றும், இப்படி பலவிடங்களிலும், திருமலையாழ்வாரோடு அதில் நித்யவாஸம் பண்ணும் எம்பெருமானோடு ஒருவிஶேஷமின்றிக்கே தங்களுக்கு பரமப்ராப்யமென்று ப்ரதிபத்திபண்ணியும்,"ப்ராக்ருதஶரீரங்களோடு திருமலையை ஸ்பர்ஶியோம்" என்ற திருவுள்ளக்கருத்தையறிந்து திருமலையிலேஆழ்வார்களைத் திருப்ரதிஷ்ட்டைகொண் டருளப்பண்ணுவியாமல் திருமலையடிவாரத்திலே அடிப்புளியாழ்வா

(க) பெரியமுதலியார்-ஸ்ரீமந்நாதமுனிகள்.

ராருகே திருமலையாழ்வாருக்கும் திருவேங்கடமுடையா னுக்கும்மங்களாஸாஸநபரராய்திருமலையாழ்வாரோடொ ருதிருமேனிகளாயெழுந்தருளியிருக்கும்படிநியமித்தும், அவர்களுக்கும் திருப்ரதிஷ்டை செய்தருளப்பண்ணு வித்தும், அவர்களுக்கு நித்யதிருவாராதநம்கொண்டரு ளும்படிக்கும், கோயில்போலே மற்றும் திருப்பதிக ள் தோறும் அத்யயநோத்ஸவத்திலே திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களெல்லாம் தத்தத்காலங்களி லே அநுஸந்திக்கும்படிக்கும், கோயில முதலான திருப்பதிகளிலேயும் நித்யம ஸாயங்காலத்திலே தி ருமாலைசாத்தியருளி திருவாலத்திகொண்டருளுகிற துக்குஉசிதமான திருப்பல்லாண்டு பூச்சூடு காப்பிடு பெரியாழ்வார் தாம் பரமபக்தி தலையெடுத்தருளிச்செய் ததாய், உபக்ரமம் மங்களாஸாஸநப்ரபந்தமமாக* பி ன்னியோங்கு பத்துப்பாட்டும், திருப்பாணாழ்வார் பெ ரியபெருமாள் திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தி லே ஈடுபட்டு அநுஸந்தித்த அநந்தரத்திலே பேறுபெறு கையாலுண்டான ஏற்றமுடைய " அமலனாதிபிரான் " என்கிற ப்ரபந்தமும், (ஜ்ஞாநாந்மைவ மேமதம் - ஜ்ஞாநீத்வா த்மைவமேமதம்) என்கிறபடியே எம்பெருமானுக்கு நற்சீவனாய் நமக்கெல்லாம் ப்ரதாநாசார்யரான நம்மாழ் வார் விஷயமான " கண்ணிநுண்சிறுத்தாம்பு " என்கிற ப்ரபந்தமும், அந்தந்த திருப்பதிகள்விஷயமான திரு மொழிகளும், சாயங்காலத்திலே, நித்யம் அநுஸந்திக் கும்படிக்கும், திருப்பதிகள்தோறும் திருமுளைத்திருநா ளிலே பெருமாள்திருவீதியிலே எழுந்தருளும்போது *செந்தமிழ்பாடுவாரானமுதலாழ்வார்கள்ஸ்ரீஸூக்தியா ன இயற்பாமுதலாக மூவாயிரமும, எம்பெருமான் ஸ்ரீ புஷ்பயாகம்கொள்ளும்போது வேதத்தோடேகூட திரு

வாய்மொழியும் அநுஸந்தேயமென்றும்; விஸ்வாமித்ரன் (కౌసల్యా సుప్రజా రామ పూర్వా సంధ్యా ప్రవర్తతే ఉత్తిష్ఠ నరశార్దూల- கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே-உத்திஷ்ட்ட நரஶார்தூல) என்று - சக்ரவர்த்தித் திருமகனை திருப்பள்ளியுணருகையைக் காண ஆசைப்பட்டு எழுப்பினபடியாலே, ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வாரும், பெரியபெருமாள் திருப்பள்ளியுணர்ந்து தம்மைக்குளிரக்கடாக்ஷிக்க வேணுமென்று நினைத்து அவன் திருப்பள்ளியுணருகைக்கு அநுஸந்தித்த திருப்பள்ளியெழுச்சியையும், ஸ்ரீநந்தவ்ரஜத்தில் கோபிமார்களா ஸ்ரீக்ருஷ்ணனைப் பகலிலே ஆவக்குண்டு அக்காலே அநந்யார்ஹைகளாய் மார்கழிநீராட என்கிற வ்யாஜத்தாலே முற்பாடரை யெழுப்பி எல்லாருங்கூட க்ருஷ்ணனை யெழுப்பி அவன் பக்கலிலே தங்களுடைய ஸமாஶ்லேஷத்தை அபேக்ஷித்துப் பெற்றபடியை அக்காலத்துக்குப் பிற்பாடையான ஆண்டாளநுகாரரூபத்தாலே அவர்களநுபவத்தை யருளிச்செய்த திருப்பாவையும், மார்கழிமாஸந்தோறும் கோயில்களிலும் க்ருஹங்களிலும் * சிற்றஞ்சிறுகாலத்திலே எம்பெருமான் திருப்பள்ளியுணரும்போது நித்யம் அநுஸந்திக்கும்படிக்கும்; பெரியபெருமாள் திருமங்கையாழ்வாருக்காகத் திருவாய்மொழிக்கு பண்ணின வேதவாநுஸாரமாத்ரமன்றிக்கே ஆழ்வார்(க) பெரியமுதலியாருக்கு வேதாந்தார்த்தங்களோடு தலையாக ப்ரஸாதித்தருளின திருவாய்மொழி அர்த்தத்தை பெரியமுதலியார் ஸம்ப்ரதாயத்திலே கேட்டருளின அர்த்தத்தை க்ரந்தஸ்த்தமாக்கவேணுமென்று நியமித்தபடியே, திருக்குருகைப்பிரான்பிள்ளானும், ஸ்ரீவிஷ்ணுபுராண ஸங்க்யையாலே ஒரு வ்யாக்யாநமிட்டருளி, திருமுன்பே வைத்து, எம்பெருமானாரும் அத்தைக்கடாக்ஷித்துத் திருவுள்ளமுகந்து "நம்முடையாரெல்லாரும் இத்தை ஸ்ரீபாஷ்யத்தோடேகூட அதிகரித்து (செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர்) என்கிறபடி

(க) பெரியமுதலியார் - ஸ்ரீமந்நாதமுனிகள்.

பெ-ஸம்ஸ்க்ருதத்ராவிட வேதாந்தத்வயத்தையும் ப்ரவசநமபண்ணிக்கொண்டுபோருங்கோள்" என்று, இப்படி அநேகம் ஸ்ரீவைஷ்ணவதர்மங்களை ஸகலதேசங்களிலும் ப்ரவர்த்தநம் செய்தருளியும, (వ్యాకుర్వతా తేనవిపశ్చితా లోకే వేదాన్తమవ్యాహతవాగ్విహారైః । రఙ్గేశకైఙ్కర్యధురన్ధరేణ యతీశ్వరేణోషిత మబ్దషష్టిః-வ்யாகுர்வதா தேந விபஸ்சிதோ லோகா வேதாந்தமவ்யாஹதவாக்விஹாரை:- ரங்கேஸகைங்கர்ய துரந்தரேண யதீஸ்வரேணோஷிதமப்தஷஷ்டி:) என்றும் (రామానుజస్సప్తశతైర్యతీనాం పీఠైశ్చతుస్సప్తతిభిస్సమేతైః । ఏకాన్తిభిర్ద్వాదశభిస్సహస్రైః శ్రీరఙ్గఆస్తే యతిసార్వభౌమః, ராமாநுஜஸ்ஸப்தஸதைர்யதீநாம் பீடைஸ்சதுஸ்ஸப்ததிபிஸ்ஸமேதை:- ஏகாந்திபிர்த்வாதஸபிஸ்ஸஹஸ்ரை: ஸ்ரீரங்க ஆஸ்தே யதிஸார்வபௌம:) என்றும் சொல்லுகிறபடியே - திருவரங்கப் பெருநகரிலே அநேகம் முதலிகளோடேகூட வேதாந்தார்த்தங்களெல்லாம் ப்ரகாஸிக்கும்படி வ்யாக்யாநம்செய்தருளிக்கொண்டு, பெரியபெருமாள் திருச்செல்வமும் நித்யாபிவ்ருத்தமாம்படி மங்களாஸாஸநம் செய்தருளி, வாழ்ந்துகொண்டிருக்க,

பின்பு எம்பெருமானார் அவதாரஸமாப்த்யநந்தரம பெருமாளுக்கும் ஸ்ரீரங்கநாயகியாருக்கும் வரகுமாரரான ஸ்ரீபராசரபட்டரும, எல்லாருக்கும ஆசார்யகுமாரரான திருக்குருகைபிரான்பிள்ளான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், எம்பார், கந்தாடையாண்டான், முதலானோர்கள், (రామానుజార్యశ్రుతిమౌళిభాష్యమర్థం రహస్యం ద్రమిడశ్రుతేశ్చ । సంప్రాప్య తైర్నైవగురూకృతాంస్తాన్ భజే చతుస్సప్తతిపీఠసంస్థాన్, ராமாநுஜார்ய ஸ்ருதிமௌளிபாஷ்யமர்த்தம் ரஹஸ்யம்த்ரமிடஸ்ருதேஸ்ச-ஸம்ப்ராப்யதே நைவ குரூக்ருதாம்ஸ்தாந் பஜேசதுஸ்ஸப்ததி பீடஸம்ஸ்தாந்) என்கிறபடியே- எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தமாகிற ராஜகுல மாஹாத்ம்யமுடையராய், அவர் ஸந்நிதியிலேயே உபயவேதாந்தார்த்தங்களையும் லபித்து, ஆசார்யபத நிர்வாஹகராயிருந்துகொண்டு, கோயிலி

லெம்பெருமானாரை நித்யஸேவார்த்தமாகவும் "ஸ்ரீமந்
நாராயணனே பரதத்த்வம்" என்னும் அர்த்தத்தை ஸ்ரீ
பாஷ்யமுகேந ப்ரவசநம் பண்ணிக்கொண்டுவரும் கால
மெல்லாம் லீலாவிபூதியிலே எழுந்தருளியிருக்கிறார்
என்கைக்காகவும், எம்பெருமானார் அர்ச்சாரூபேண எழு
ந்தருளும்படிக்கும் பெரியபெருமாள் நியமநமுண்டான
படியாலும், அர்ச்சாரூபேண திருப்ரதிஷ்டை கொண்ட
ருளப்பண்ணியும், மற்றும் திருப்பதிகள் தோறும் எம்பெ
ருமானாரை திருப்ரதிஷ்டை கொண்டருளப்பண்ணுவி
த்தும், (అర్వాఞ్చో యత్పదసరసిజద్వన్ద్వమాశ్రిత్యపూర్వే మూర్ధ్నా
యస్యాన్వయముపగతా దేశికా ముక్తిమాప్తాః, அர்வாஞ்சோ யத்
பதஸரஸிஜத்வந்த்வ மாச்ரித்யபூர்வே மூர்த்நா யஸ்யாந்வ
யமுபகதா தேசிகா முக்தி மாப்தாः) என்கிறபடியே -
தம்முடைய திருவடிகளில் ஸம்பந்த ஸம்பந்த முடை
யவர்களுக்கெல்லாம் தாம் உத்தாரகராயும், தமக்கு முன்
புள்ள முதலிகளுக்கு பவிஷ்யதாசார்யாவதாரம் என்
னும்படி உத்தாரகராயும், (విష్ణోశ్శేషీ తదీయశ్శుభగుణనిలయో
విగ్రహశ్శ్రీశఠారిః శ్రీమాన్ రామానుజార్యః పదకమలయుగం భాతి
రమ్యం తదీయమ్। యస్మిన్ రామానుజార్యే గురురితి చ పదం భాతి నాన్య
త్రతస్మాత్ శిష్టం శ్రీమద్గురూణాం కులమిదమఖిలం తస్య నాథస్య శేషమ్,
விஷ்ணோஶ்சேஷீ ததீயஸ் ஸுபகுணநிலயோ விக்ரஹஸ்
ஸ்ரீசடாரிः ஸ்ரீமாந்ராமாநுஜார்யः பதகமலயுகம்பாதிரம்
யம் ததீயம்-யஸ்மிந்ராமாநுஜார்யே குருரிதிசபதம்பா
தி நாந்யத்ர தஸ்மாத் சிஷ்டம் ஸ்ரீமத்குரூணாம் குலமித
மகிலம தஸ்யநாதஸ்ய சேஷம்) என்கிறபடியே-பகவத
வதாரத்துக்கு ப்ரதிநிதியான ஆசார்யாவதாரமாய், இப்
படி ஸகலஜந ஜீவாதுவான எம்பெருமானார் விஷயமா
ன நூற்றந்தாதியை, பெரியமுதலியார் கண்ணிநுண்சி
றுத்தாம்பை அருளிச்செயல்நடுவே சேவித்தாப்போ
லே, திவ்ய ப்ரபந்தங்களோடு ஒருகோவையாய்ச் சே
வித்து, அத்யயநோத்ஸவாநந்தரத்திலே இயற்பா அநு
ஸந்தாநாநந்தரத்தில் அநுஸந்திக்கும்படிக்கும்; திருவா
ய்மொழி அநுஸந்தாநாநந்தரம் கண்ணிநுண்சிறுத்தாம்பு

அநுஸந்தேயமானாப்போலே, ததநந்தரம் இத்தைய அநுஸந்திக்கும்படிக்கும்; ப்ராம்ஹணனுக்கு நித்ய காயத்ரீஜபம் கர்த்தவ்யமானாப்போலே, ப்ரபந்நனுக் இதுவும் நித்யாநுஸந்தேயமென்றும்; (பேறொன்றும ற்றில்லை நின்சரணன்றி, அப்பேறளித்தற்-காறொன்றுமி ல்லை மற்றச்சரணன்றி) என்றும் - எம்பெருமானார் திரு டிகளை ப்ராப்யப்ராபகமென்றும் தாங்கள் அத்யவஸ த்து, தங்களைப்பற்றினார்க்கு உபதேசித்தும்; இப்ப சரமார்த்தவிஶேஷங்களெல்லாவற்றையும்வெளியிட்டு கொண்டு (படித்வாபாஷ்யம் தத்ப்ரவசநபரஸ்தெளஶ ரிபோ: நிளஹஸ்த்தாதத்வந் மதுரிபுநிவாஸஸ்த்தல ரோ - வஸித்வாரங்காதௌததிபஹரோ ரர்ச்சநவிதௌ ஶ-ஸிம்த்ரவ்யாணும் ‡ க்ரஹநமயஶூத்தேநமநஸா வயஸ்ய ஶ்ரீஶாங்க்ரி ப்ரபதநபரஸ்யோக்திநிஶம் ப்ர ந்நாநாம் ஶௌரே: பதகமலஸேவாபரிசய:-க்ருஷிம் க்ருத்வாதஸ்மிந் யதுகிரிதடே நித்யவஸதிம் ஷடர்த்தா ஶ்ரீகாந்த ப்ரபதநவிஶௌஸாதகதமா:, இதிபரோக் தோஷ்வேகம் ருசிவிஷயமாலம்ப்யபகவத் பராம்கா லக்ஷேபம் குருதபவதாநந்யஶரணா:-ஸ்வஹஸ்தேஷம்ப் ரீத்யா குருசரணபக்த்யாசபவதாம் ஶரீராந்தே ஶ்ரீமாந் ப்ரதிஶதபரம் தாமஸஸூகம், இதிஶ்ரீமாந்ராமாநுஜமு நிரா ‡ விநதாந்க்ருத்யவிந தாந்பணீந்த்ராம்ஶோயோகீசரமஸமயேப்ராஹதயயா) என்று அருளிச்செய்தபடியே இதரமதநிரஸந பூர்வக மாக உபயவேதாந்தங்களையும் வ்யாக்யாநஞ் செய்தரு ளிக்கொண்டு, ஆழ்வார்கள் ஶ்ரீஸூக்திகளான திவ்ய ப்ரபந்தங்களையும ப்ரவசநம் பண்ணிக்கொண்டு, தத்த ததிகாராநுகுணமாக ஹிதோபதேசம் செய்தருளிக் கொண்டு, எம்பெருமானார் தர்ஶநத்தை வர்த்திப்பித் துக்கொண்டு வந்தார்களென்று ஜீயரருளிச்செய்யக் கே ட்டிருக்கையாயிருக்கும் என்றுபிள்ளையருளிச்செய்வார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

‡ இங்கு விட்டுப்போன க்ரந்தத்தை கோசாந்தரங்களிற் காண்க.